கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20.01.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிலக்கடலைக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவுப்பு திட்டமானது, நிலக்கடலைக்கான விலை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நிலக்கடலை இந்தியாவில் ஒரு முக்கியமான எண்ணெய் வித்து பயிர் ஆகும் , இது நாட்டின் மொத்த எண்ணெய் வித்துக்கள் பரப்பளவில் முதலிடத்திலும் மற்றும் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. உலகளவில் நிலக்கடலை உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது . அதனை தொடர்ந்து இந்தியா , நைஜீரியா, அமெரிக்கா, சூடான் மற்றும் செனிகல் ஆகிய நாடுகள் உள்ளன.

இந்தியாவில் குறுவை மற்றும் ரபி பருவத்தில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. பயிர் முன்னறிவிப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ( CFCC) மதிப்பீட்டின்படி, 2022-23ம் ஆண்டில் காரீஃப் பருவத்தில் 45.53 இலட்சம் எக்டராக இருந்த பயிர் பரப்பு 2023-24 இல் 43.91 இலட்சம் எக்டராகவும், ரபீ பருவத்தில் 2022-23 இல் 3.74 இலட்சம் எக்டரில் இருந்து 2. 83 இலட்சம் எக்டராகவும் 2023-24 இல் குறைந்து வருகிறது. வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் முன் கூட்டிய மதிப்பீட்டின்படி (2021-22) குஜராத் (44.89 இலட்சம் டன் கள்) நிலக்கடலை உற்பத்தியில் நாட்டில் முதலிடத்தில் உள்ளது , அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் ( 16.96 இலட்சம் டன்) , தமிழ்நாடு ( 10.47 இலட்சம் டன்) , மத்தியப் பிரதேசம் ( 6.71 இலட்சம் டன்) , ஆந்திரப்பிரதேசம் ( 5.16 இலட்சம் டன்) , கர்நாடகா (4.87 இலட்சம் டன்) ஆகிய மாநிலங்களாகும்.

நிலக்கடலை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நா டு முக்கியமான மாநிலமாகும். தமிழகத்தில் சுமார் 3.72 லட்சம் எக்டர் பரப்பளவில் 10.47 லட்சம் டன் நிலக்கடலை உற்பத்தி செய்யப்படுகிறது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்க ளில் நிலக்கடலை அதிகளவு பயரிடப்படுகிறது. வர்த்தக மூலங்களின்படி, தற்போ து சந்தைக்கு நிலக்கடலையின் வரத்து தெலுங்கானா, ஆந்திரா பிரதேசம் மற்றும் கர்நாடகவிலிருந்து வருகின்றது. அதிக உற்பத்தி செய்யும் மாநிலங்களில் மழை பொழிவு காரணமாக நில க்கடலையின் பரப்பளவு மற்றும் சந்தை வரத்து குறைந்து காணப்படுகிறது.

விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 1 6 ஆண்டுகளாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய நிலக்கடலை விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான நிலக்கடலை பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 80 முதல் 85 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், சந்தை வரத்து மற்றும் பருவ மழை பொறுத்து நிலக்கடலை விலையில் சிறிய ஏற்ற இறக்கங்கள் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-2431405
2. இயக்குனர் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரி
   நீர்மற்றும் புவியியல் ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-6611278

**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003,
தொலைபேசி :0422-2450812

**மக்கள் தொடர்பு அலுவலர்**